வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

நாள்: 18.07.2024 நேரம் : மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

உலகின் 5 மிகப் பெரிய நிலக்கரி சுரங்களில், 2 சுரங்கங்கள் இந்தியாவில் இருப்பதாக, மத்திய நிலக்கரித் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நாட்டில், இயற்கை எரிவாயு நுகர்வு கடந்த ஜூன் மாதத்தில், 7 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

உச்சநீதிமன்ற நீதிபதிகளாக நீதிபதி திரு. கோட்டீஸ்வர் சிங், நீதிபதி திரு. ஆர் மகாதேவன் ஆகியோர், இன்று பதவி ஏற்றுக் கொண்டனர்.

மத்திய மேற்கு மற்றும் அதை ஒட்டிய வடமேற்கு வங்கக் கடலில், இன்று காலை, ஒரு காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி உள்ளது.

---------------------------

*நிலக்கரி (9)*

உலகின் 5 மிகப் பெரிய நிலக்கரி சுரங்களில், 2 சுரங்கங்கள் இந்தியாவில் இருப்பதாக, மத்திய நிலக்கரித் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. சட்டீஸ்கரைச் சேர்ந்த கோல் இண்டியா நிறுவனத்தின் துணை நிறுவனமான, தென்கிழக்கு நிலக்கரி வயல் நிறுவனத்தின் ஜெவ்ரா நிலக்கரிச் சுரங்கம், உலகின் 2ஆவது பெரிய நிலக்கரிச் சுரங்கமாகவும், கஸ்முண்டா நிலக்கரிச் சுரங்கம், உலகின் 4ஆவது பெரிய நிலக்கரிச் சுரங்கமாகவும் திகழ்கின்றன. இவ்விரு சுரங்கங்களும் இணைந்து, ஆண்டுக்கு 100 மில்லியன் டன் நிலக்கரியை உற்பத்தி செய்வதும், நாட்டின் மொத்த நிலக்கரி உற்பத்தியில், இது சுமார் 10 சதவிகிதம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---------------------------

எரிவாயு (18)

நாட்டு மக்கள் மேலும், மேலும் அதிக அளவில் பசுமை எரிபொருளுக்கு மாறி வரும் நிலையில், இயற்கை எரிவாயு நுகர்வு கடந்த ஜூன் மாதத்தில், 5 ஆயிரத்து 594 மில்லியன் கனமீட்டராக, கடந்த ஆண்டின் இதே கால கட்டத்தைவிட, 7 சதவிகிதம் அதிகரித்துள்ளது. வீடுகளில் மட்டுமின்றி, நகர்ப்புற போக்குவரத்துத் துறையிலும், இயற்கை எரிவாயுவின் பயன்பாடு அதிகரித்து வருவதே இதற்கு காரணம் என்று மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கடந்த ஜூன் மாதத்தில், உள்நாட்டு அளவிலான எரிவாயு உற்பத்தி, 2 ஆயிரத்து 993 மில்லியன் கனமீட்டராக 2.9 சதவிகிதம் அதிகரித்து இருப்பதாகவும், அதிகரித்து வரும் தேவைகளை எதிர்கொள்ள இதனால் ஏதுவானதாகவும் அமைச்சகம் கூறியுள்ளது. பசுமை எரிபொருளின் தேவை அதிகரித்து வருவதற்கு ஏற்ப, எரிவாயு நிறுவனங்கள் தங்களின்

வினியோகக் கட்டமைப்பை விஸ்தரித்து வருவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த ஜூன் மாதத்தில், பெட்ரோல்-டீசல், மற்றும், விமான எரிபொருள் உள்ளிட்ட பெட்ரோலிய பொருட்களின் நுகர்வு, 20 மில்லியன் டன்னாக, 2.6 சதவிகிதம் அதிகரித்து உள்ளது. கச்சா எண்ணெய் இறக்குமதி, 5.6 சதவிகிதம் குறைந்துள்ள போதிலும், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய்-யின் விலை உயர்வு காரணமாக, எண்ணெய் இறக்குமதி செலவு, 11 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

---------------------------

நீட் (8)

நீட் யுஜி தேர்வில், முறைகேடுகள் நடந்ததாக குற்றம்சாட்டி தாக்கல் செய்யப் பட்டுள்ள 40 மேற்பட்ட மனுக்கள் மீது உச்சநீதிமன்றத்தின் விசாரணைகள் இன்று தொடங்கின. சமூக தாக்கம் அதிகமுள்ள வழக்கு இது என்று, தலைமை நீதிபதி திரு. சந்திர சூட் தலைமையிலான அமர்வு

விசாரணையின் தொடக்கத்தில் கூறியது. மே 5ஆம் தேதி நடைபெற்ற நீட் தேர்வை ரத்து செய்து, மறுதேர்வு நடத்தக் கோருவோர், கேள்வித்தாள் கசிவு, அந்த அளவிற்கு பரவலாக இருந்ததா என்பதை எடுத்துக்காட்ட வேண்டும் என்றும் நீதிபதிகள் கூறினர்.

---------------------------

கைது (5)

நீட் யுஜி கேள்வித் தாள் கசிந்து வெளியான வழக்கு தொடர்பாக, பட்னா-எய்ம்ஸ் மாணவர்கள் நால்வரை, சிபிஐ அதிகாரிகள் கைது செய்து, விசாரித்து வருகின்றனர். இவர்களின் மடிக் கணினிகளையும் அதிகாரிகள் கைப்பற்றி இருப்பதாகவும், இவர்களின் அறைகளுக்கு சீல் வைக்கப்பட்டு இருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

---------------------------

பங்களாதேஷ் (10)

வங்கதேசத்தில் உள்ள இந்திய சமூகத்தினர், மற்றும் இந்திய மாணவர்கள், தங்களின் வசிப்பிடங்களுக்கு வெளியே செல்வதை குறைத்துக் கொண்டு, பயணங்களை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும் என, வெளியுறவு அமைச்சகம் அறிவுறுத்தி உள்ளது. பங்களாதேஷ்-ல் தற்போதுள்ள நிலவரங்களை கருத்தில் கொண்டு, இந்த அறிவுறுத்தல் வெளியிடப் பட்டுள்ளது. தாக்காவில் உள்ள இந்திய தூதரகத்தில், அவசரகால தொலைபேசி எண்கள், 24 மணி நேரமும் செயல்பட்டு வருவதாகவும், உதவிக்கு தேவை உள்ள இந்தியர்கள், இந்த எண்களை தொடர்பு கொள்ளலாம் என்றும் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. தாக்காவில் உள்ள இந்திய தூதரகத்தின் அவசரகால தொலைபேசி எண்

ப்ளஸ் 880-1937 400 591

---------------------------

கப்பல் (12)

வெளியுறவுத் துறை இணையமைச்சர் திரு. கீர்த்திவர்தன் சிங் இன்று, ஓமன் நாட்டிற்கான இந்தியத் தூதர் திரு. அமீத் நாரங்-கைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, நடுக்கடலில் கவிழ்ந்து மூழ்கிய Prestige Falcon எண்ணெய்க் கப்பலின் நடப்பு நிலை குறித்து கேட்டறிந்தார். இக்கப்பலில் இருந்து, இந்திய விமானப் படையின் INS – TeJ கப்பலால் மீட்கப்பட்ட 8 இந்தியர்கள் கரைக்கு வந்து சேர்ந்து விட்டதாக சமூக ஊடகத்தில் அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்தியர் ஒருவரின் உடல் மீட்கப் பட்டுள்ளதாகவும், நிலவரங்களை அரசு தொடர்ந்து கண்காணித்து, இயன்ற எல்லா உதவிகளும் வழங்கப் படுவதை, உறுதிப்படுத்தி வருவதாகவும் அவர் கூறியுள்ளார். உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்துக் கொள்வதாகவும், மீட்புப் பணிகளில் உதவிய

அனைத்து இந்திய மற்றும் ஓமானிய அதிகாரிகளுக்கு நன்றி என்றும் அவர் கூறியுள்ளார்.

---------------------------

வெளியுறவுச் செயலர் (10)

வெளியுறவுச் செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி, 2 நாள் பயணமாக நாளை பூட்டான் செல்கிறார். வெளியுறவுச் செயலராக பதவியேற்ற பின்னர் அவர் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டுப் பயணமாக இப்பயணம் அமைகிறது. பூட்டானில் அந்நாட்டின் பிரதமர், வெளியுறவு அமைச்சர், வெளியுறவுச் செயலர், மற்றும், மூத்த அதிகாரிகளை, திரு. மிஸ்ரி சந்திக்கிறார். இருநாட்டு வெளியுறவுச் செயலர்களும் இணைந்து, மேம்பாட்டு ஒத்துழைப்பிற்கான இந்தோ-பூட்டான் பேச்சு வார்த்தைகளுக்கு தலைமை ஏற்க உள்ளனர். அண்டை நாடுகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதான இந்தியாவின்

கொள்கைக்கு ஏற்றதாக, வெளியுறவுச் செயலரின் பூட்டான் அமைந்து இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

---------------------------

*நீதிபதிகள் (7)*

உச்சநீதிமன்ற நீதிபதிகளாக நீதிபதி திரு. கோட்டீஸ்வர் சிங், நீதிபதி திரு. ஆர் மகாதேவன் ஆகியோர் இன்று பதவி ஏற்றுக் கொண்டனர். இவர்களுக்கு, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திர சூட், பதவி பிரமாணம் செய்து வைத்தார். உச்சநீதிமன்ற நீதிபதிகளாக பதவி உயர்வு பெறுவதற்கு முன்பாக, நீதிபதி திரு. கோட்டீஸ்வர் சிங், ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகவும், நீதிபதி திரு. ஆர். மகாதேவன், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவராகவும், பதவி வகித்து வந்தனர்.

---------------------------

வானிலை (15)

மத்திய மேற்கு மற்றும் அதை ஒட்டிய வடமேற்கு வங்கக் கடலில், இன்று காலை ஒரு காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி உள்ளது. இது அடுத்த 2 நாட்களில், சற்று வலுவடைந்து, ஒடிசா கடற்கரையை நோக்கி நகரக் கூடும் என எதிர்பார்க்கப் படுவதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்றைய தினம், தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், மிதமான மழை எதிர்பார்க்கப் படுகிறது. தேனி, திண்டுக்கல், நெல்லை, தென்காசி மாவட்ட மலைப் பகுதிகள் மற்றும், குமரி மாவட்டத்தில் கனமழைக்கும், கோவை மாவட்ட மலைப் பகுதிகளில், மிக கனமழைக்கும், நீலகிரி மாவட்டத்தில் ஒரிரு இடங்களில், அதி கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 24ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம்

என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. மத்திய வங்கக் கடல், தெற்கு வங்கக் கடலின் வடக்கு பகுதி, மன்னார் வளைகுடா, தென்தமிழக கடலோரம், மற்றும், குமரிக்கடல் பகுதிகளில், பலத்த சூறாவளிக் காற்று வீசக் கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

---------------------------

*மாண்டவியா* (17)

வளரும் விளையாட்டுத் திறன்களை இனம் காண்பதற்கான மத்திய அரசின் 2ஆம் கட்ட கேலோ இண்டியா- கீர்த்தி திட்டத்தை, மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, புதுடெல்லியில் நாளை தொடக்கி வைக்கிறார். அதிநவீன தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களையும், விளையாட்டுத் திறன்களை இனம் காண்பதில் சர்வதேச அளவில்

பின்பற்றப்படும் சிறந்த நடைமுறைகளையும் உள்ளடக்கி, கீர்த்தி திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது. அடித்தட்டு நிலையில் விளையாட்டு திறமைகளை இனம் காண்பதற்கான எல்லா அம்சங்களும் அடங்கிய ஒரே தளமாக புதிய வசதி அமையும் என்றும், நடப்பு நிதியாண்டில், எல்லா மாநிலங்களும் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு, மொத்தம் 20 லட்சம் இளம் விளையாட்டு வீரர்களின் திறன்கள் மதிப்பீடு செய்யப்படும் என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது. முதல்கட்ட கீர்த்தி திட்டம் கடந்த மார்ச் 12ஆம் தேதி சண்டிகரில் தொடக்கப் பட்டதும், மாநிலத்தின் 70 மையங்களில் சுமார் 3 லட்சத்து 62 ஆயிரம் பேர் இத்திட்டத்திற்கு பதிவு பெற்று, 11 விதமான விளையாட்டுகளில் திறன் மதிப்பீடு செய்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

---------------------------

*கால்நடை (9)*

கிராமப்புறங்களில், ஆடு-கோழி மற்றும் பன்றி வளர்ப்பிலும், தீவன உற்பத்தியிலும் ஈடுபடும் தனிநபர்கள், சுய உதவிக் குழுக்கள், விவசாய உற்பத்தி சங்கங்கள் மற்றும் விவசாய கூட்டுறவு சங்கங்களுக்கு, 50 சதவிகித மூலதன மானியம் வழங்குவதற்கான மத்திய திட்டத்தின் கீழ், புதுச்சேரியில் மானியம் பெற தகுதி உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் என கால்நடை பராமரிப்புத் துறை அறிவித்துள்ளது. உத்யமி-மித்ரா இணைய தளம் மூலம் 45 நாட்களுக்குள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்றும், கூடுதல் விவரங்களுக்கு மாநில கால்நடை பராமரிப்புத் துறை இணைய தளத்தை அணுகலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---------------------------

*புதுச்சேரி-ஹஜ் (6)*

இவ்வாண்டு புதுச்சேரி, காரைக்கால் மற்றும் மாஹே பகுதிகளில் இருந்து, மாநில ஹஜ் கமிட்டி மூலம் ஹஜ்

பயணம் மேற்கொண்டு திரும்பி உள்ள, இஸ்லாமிய சமூகத்தினர் 78 பேர் இன்று, முதலமைச்சர் திரு. ரங்கசாமியை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர். சட்டப் பேரவை வளாகத்தில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது, மாநில ஹஜ் கமிட்டி தலைவர் திரு. இஸ்மாயில் உடன் இருந்தார்.

---------------------------

*காசி* (9)

இந்து பஞ்சாங்கத்தின்படி, இவ்வாண்டு, வரும் 22 ஆம் தேதி தொடங்கும் சிராவண மாதத்தின், ஒவ்வொரு திங்கட் கிழமையிலும், காசி விஸ்வநாதர் கோவிலில், மூலவரை தொட்டு பூஜிக்கவும், தரிசனத்திற்கான அன்றாட நுழைவு சீட்டுகளுக்கும் அனுமதி இராது என்று கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது. காசி விஸ்வநாதர் கோவிலுக்கு வரும் பக்தர்களின் பாதுகாப்பு, தரிசனம் மற்றும் வழிபாட்டிற்கான

புதிய வழிகாட்டு நெறிமுறைகளில் இவ்வாறு அறிவிக்கப் பட்டுள்ளது. புதிய வழிகாட்டு நெறிமுறைகள், மற்றும், போக்குவரத்து விதிமுறைகளின் அமலாக்கம் குறித்து, இன்று வாரணாசியில், மூத்த காவல் துறை அதிகாரிகளின் கூட்டம் நடைபெற்றது.

---------------------------

பூரி ஜெகந்நாதர் (11)

ஒடிசாவில், 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பூரி ஜெகந்நாதர் கோவிலில் ரத்தின பண்டாரம் என்னும் கருவூலம், 39 ஆண்டுகளுக்கு பின்னர் கடந்த ஞாயிற்றுக் கிழமை திறக்கப்பட்டு, அதன் வெளியறையில் இருந்த, விலை உயர்ந்த ஆபரணங்கள் பாதுகாப்பான வலுவறைக்கு மாற்றப் பட்டதை தொடர்ந்து, ரத்தின பண்டாரம் இன்று மீண்டும் திறக்கப்பட்டு, அதன் உள்ளறையில் இருந்து, விலை உயர்ந்த ஆபரணங்கள், வலுவறைக்கு மாற்றப்பட்டன. பூரி ஜெகந்நாதர் வழிபாடுகளை தொடர்ந்து

மேற்கொள்ளப்பட்ட இந்நடைமுறைகளின் போது, பூரி மன்னர் கஜபதி மகராஜ் திவ்ய சிங் தேவ் உடன் இருந்தார். ரத்தின பண்டாரத்தை இந்திய தொல்லியல் துறை அதிகாரிகள் பழுது பார்த்து புதுப்பித்த பின்னர், பூரி ஜெகந்நாதர் ஆபரணங்கள் மீண்டும் ரத்தின பண்டாரத்தில் வைக்கப்படும்.

---------------------------

*ரயில்* (9)

உத்தரபிரதேசத்தில் இன்று, கோண்டா-கோரக்பூர் வழிதடத்தில் உள்ள ஜிலாஹி ஹால்ட் ரயில் நிலையம் அருகே, சண்டிகார்-திப்ருகார் எக்ஸ்பிரஸ் ரயில் தடம் புரண்டதை தொடர்ந்து, லக்னோவில் இருந்து உதவி மீட்புக் குழுவினர் உடனடியாக அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர். ரயில்வே அதிகாரிகளும் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளதாக, ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. உள்ளூர் நிர்வாகத்தினர் மற்றும் அருகில்

உள்ள கிராமவாசிகள், ஏற்கனவே உதவி மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருவதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. உயிரிழப்பு அல்லது காயம் குறித்து உடனடியாக தகவல் இல்லை.

---------------------------

*கர்நாடகா* (11)

கர்நாடக மாநிலம் உத்தர கன்னடா மாவட்டத்தில், அங்கோலா வட்டம் ஷிரூர் அருகே, தேசிய நெடுஞ்சாலையில் ஏற்பட்ட நிலச் சரிவை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள மீட்புப் படையினர், இன்று, மேலும் 2 சடலங்களை மீட்டு இருப்பதால், நிலச் சரிவில் பலியானோர் எண்ணிக்கை, 6 ஆக அதிகரித்துள்ளது. தேசிய பேரிடர் மீட்புப் படையினர் கொட்டும் மழைக்கு இடையிலும், மீட்புப் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். சம்பந்தப்பட்ட சாலைப் பிரிவில், வாகனப் போக்குவரத்து தொடர்ந்து நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க் கிழமை ஏற்பட்ட நிலச் சரிவில், தேனீர் கடை ஒன்றும், 2 டேங்கர் லாரிகளும், மணல் குவியலில் சிக்கிய நிலையில், அங்குள்ள மற்றவர்களை, உள்ளூர் நிர்வாகத்தினர், பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தி உள்ளனர்.

---------------------------

*ஜம்மு-காஷ்மீர்* (10)

ஜம்மு-காஷ்மீரின் தோடா மாவட்டத்தில், கஸ்திகார் வனப் பகுதிக்கு உட்பட்ட ஒரு கிராமத்தில் உள்ள பள்ளியில், தேடுதல் பணிகளுக்காக பாதுகாப்புப் படையினர் அமைத்து இருந்த தற்காலிக முகாம் மீது, இன்று அதிகாலை தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டதில், பாதுகாப்புப் படையினர் இருவர் காயமடைந்தனர். தீவிரவாதிகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையிலான மோதல் சுமார் 1 மணி நேரம் நீடித்தது. கடந்த திங்கட் கிழமை இரவு ஜம்மு-காஷ்மீரின் தீஸ்ஸா

வனப்பகுதியில், பாதுகாப்புப் படையினர் நால்வர் தீவிரவாத தாக்குதலில் கொல்லப் பட்டதை தொடர்ந்து, பாதுகாப்புப் படையினர் பெருமளவிலான தேடுதல் பணிகளை தொடக்கி இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

---------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

உலகின் 5 மிகப் பெரிய நிலக்கரி சுரங்களில், 2 சுரங்கங்கள் இந்தியாவில் இருப்பதாக, மத்திய நிலக்கரித் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நாட்டில், இயற்கை எரிவாயு நுகர்வு கடந்த ஜூன் மாதத்தில், 7 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

உச்சநீதிமன்ற நீதிபதிகளாக நீதிபதி திரு. கோட்டீஸ்வர் சிங், நீதிபதி திரு. ஆர் மகாதேவன் ஆகியோர், இன்று பதவி ஏற்றுக் கொண்டனர்.

மத்திய மேற்கு மற்றும் அதை ஒட்டிய வடமேற்கு வங்கக் கடலில், இன்று காலை, ஒரு காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி உள்ளது.